தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

ஆனி 28, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2022
1991, ஜுலை 12, வெள்ளிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற.''

வணக்கம் உடையவனாகவும், இன்சொல் வழங்குவோனாகவும் ஆதலே ஒருவனுக்கு அணிகலனாகும்; மற்றைய அணிகள் அணிகள் அல்ல.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. தகவல் கோரல்

வேலூர், சத்துவாச்சாரி பகுதியிலும், சுற்றியுள்ள பகுதிகளிலும காலரா நோய் பரவுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

*திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணையே இல்லாமல் நிதியை கோடிக்கணக்கில் சேர்த்திருப்பவர்களுக்கு தமிழ்நாட்டிலே இடமே இல்லையென்று ஒரு சரித்திரத்தைப் படைத்திருக்கிற இந்த ஆட்சியிலே, 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற முறையிலே நோய் உற்றவர்கள் யாருமே இருக்கக் கூடாது என்ற முறையில் ஆளுநர் உரையில் 22-வது பத்தியில் கூறியிருக்கிறபோது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் குறைகளை மட்டும் சொல்லுங்கள், பேசவேண்டாம்.

திரு. சி. ஞானசேகரன் : வேலூரிலே சத்துவாச்சாரி பகுதி-1 பகுதி-2 என்ற பகுதிகளிலும், அம்பேத்கர் நகரிலும், வேலூர், கொட்டாவூர், ஒடுக்கத்தூர் போன்ற வேலூர் தாலுக்காவில் உள்ள பல கிராமங்களிலும் காலரா நோய் மிக அதிகமாகப் பரவி, கொட்டாவூரில் இரண்டு பேர் இறந்திருக்கிறார்கள். வேலூரில் மட்டுமல்லாமல் வட

[திரு. சி. ஞானசேகரன்] [1991 ஜூலை 12

ஆற்காடு முழுவதிலும் இன்று காலரா நோய் ஆங்காங்கே தொற்றிக்கொண்டு போய் பலபேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்று காலையிலே கூட இராணிப் பேட்டையினுடைய முன்னாள் எம். எல். ஏ. திரு. கதிர்வேலு, வாலாஜா மருத்துவமனையில் 14 பேர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு என்ன செய்ய வேண்டும் என்ற உங்கள் விருப்பத்தைச் சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: இந்தக் காலரா நோயைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அதே போல இரண்டு பேர் இந்த நோயால் இறந்திருப்பதால் அவர்களுடைய குடும்பத்திற்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ஏதாவது நிவாரண உதவி முதலிலே கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கிறேன். அடுத்து இப்போது பலபேர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே மாவட்ட ஆட்சியர், ஆர்.டி.ஓ. ஆகியவர்களை சென்ற ஞாயிற்றுக்கிழமை நான் தொடர்பு கொள்ள முயன்றபோது அங்கே தலைநகரில் யாருமே இல்லை. டி.எம்.ஓ. மட்டும்தான் இருந்தார். குடிதண்ணீரில் குளோரினைக் கலந்து கொடுத்தால்தான் இதைத் தடுக்க முடியும் என்று அவர் சொன்னார். ஆகவே இந்த நோயைத் தடுக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் வட ஆற்காடு மாவட்டம் முழுமையும் காலரா நோய் பரவி, நான் அங்கே சென்று வந்தால் ** ஆகவே உடனே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மிகப் பணிவோடு, பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசுக்குக் கோரிக்கை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த காலரா நோய் பரவுகிறது என்ற ஒரு செய்தியை கேள்விப்பட்டவுடனே தமிழகத்தினுடைய முதலமைச்சர், புரட்சித்தலைவி அவர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், என்னையும் அழைத்து, அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். ஏற்கெனவே கூட செய்தி பத்திரிக்கைகளில் வந்தது. அதற்கான நடவடிக்கைகள் துரிதமாக எடுக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அரசுத் துறை அதிகாரிகளிடம் வற்புறுத்தப்பட்டு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்னும் சொல்லப்போனால் கடந்த ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும் இருந்ததைவிட, எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது அந்த எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கிறது என்று கூட தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் அந்த அளவிற்குக் கூட இருக்கக் கூடாது, அந்த நோய் வராமல் தடுக்கப்பட வேண்டும் என்பதற்காக தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2. கவன ஈர்ப்பு

(அ) பிரிக்கப்பட்ட இராமநாதபுரம் பகுதிகளில் தனித்தனி மாவட்ட நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வ. சத்தியமூர்த்தி, திரு. மு. தென்னவன் ஆகிய இருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து ஒரு கவன ஈர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவ்விருவரில் ஒருவர் மாண்புமிகு சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''இராமநாதபுரம் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப் பட்டும், பிரிக்கப்பட்ட ஒவ்வொரு மாவட்டத்திலும் இன்னமும் தனி மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்படாதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

இராமநாதபுரம் மாவட்டம் பிரிக்கப்படுவதற்கு முன்பு அதனுடைய மாவட்ட நீதிமன்றமும் (District and Sessions Court) மாவட்ட கூடுதல் நீதிமன்றமும் (Additional